# 12

# தேவனுடைய பரிசுத்த ஆசாரியத்துவம்

*"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென் " (வெளி. 1:5, 6).*

பக்குவம் பெற்ற மனிதன் என்ற வகையிலும், மற்றும் அமெரிக்கக் குடிமகன் என்ற வகையிலும், நான் இரண்டு வகையான சட்டங்களின்கீழ் வாழ்ந்து கொண்டுள்ளேன். ஒரு சிறுபிள்ளை என்ற வகையில், நான் நமது நாட்டில் சிறுவர்களுக்காக உள்ள சட்டங்களின் தொகுதியின்கீழ் வாழ்ந் திருந்தேன். அந்த வேளையில், நான் ஒரு காரை ஓட்டவோ, ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொள்ளவோ, எனது சொந்த வங்கிக் கணக்கை வைத்துக் கொள்ளவோ அல்லது வாக்களிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. நான் எனது பெற்றோரின் மேற்பார்வையின்கீழ் வாழ வேண்டியிருந்தது. எந்த ஒரு பத்திரத்திலும் எனது பெற்றோர்களில் ஒருவருடைய உடன் கையெழுத்தில்லாதிருந்தால், எனது கையெழுத்தானது அர்த்தம் எதுவுமற்ற தாக இருந்தது. நான் ஒரு சிறு பிள்ளையாகவே மதிக்கப்பட்டேன், மற்றும் விசேஷமான சட்டங்கள் எனது வாழ்வை ஆளுகை செய்து என்னைப் பாதுகாத்தன.

இப்பொழுது, வயது வந்த நபர் என்ற வகையில் நான் சட்டங்களின் இன்னொரு வரிசையின் கீழ் வாழ்கின்றேன். இந்தச் சட்டங்களின் வரையறைகளுக்குள், நான் ஒரு காரைச் சொந்தமாக்கிக் கொண்டு, அதை ஓட்ட முடியும், ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொள்ள முடியும், தனிப்பட்ட வங்கிக் கணக்கு ஒன்றினைக் கொண்டிருக்க முடியும், மற்றும் பொது அலுவலர்களுக்காக வாக்களிக்க முடியும். சட்டங்களின் இந்தத் தொகுப்பின் கீழ், நான் ஒரு தனி நபராக இருக்கின்றேன், ஆனால் இந்த தனிப்பட்ட சிறப்புரிமைகளுடன் தனிப்பட்ட பொறுப்புகளும் வருகின்றன. நான் வேலை செய்யவும் பணம் ஈட்டவும் தேர்ந்து கொள்ளலாம், ஆனால் நான் ஈட்டிய பணத்திற்கு வரிகட்ட வேண்டிய

பொறுப்பு எனக்கு உள்ளது. எனது பெற்றோர்களின் அங்கீகாரம் இன்றி நான் சொந்தமாக முடிவுகள் எடுக்கும் உரிமை எனக்கு உண்டு, ஆனால் எனது செயல்பாடுகளுக்குப் பொறுப்பானவன் என்ற வகையில் நான் சட்டத்தினால் நியாயத் தீர்க்கப்படுவேன். வயது வந்த நபர் என்ற வகையில் நான் சட்டங்களின் புதியதொரு தொகுப்பின் கீழ் வாழ்பவனாய் இருக்கின்றேன், இது நான் ஒரு குழந்தையாயிருக்கையில் வாழ்ந்திருந்த சட்டத் தொகுப்பில் இருந்து மாறுபட்டதாக உள்ளது.

முதல் நூற்றாண்டில் இருந்த யூதர்கள் இதே விதமான சூழ்நிலையில் தாங்கள் இருந்ததாகக் கண்டனர். இரண்டு தொகுப்புகளான ஆவிக்குரிய பிரமாணங்கள் அல்லது உடன்படிக்கைகளின் கீழ் தாங்கள் வாழ்வதை அவர்கள் அனுபவித்தனர். அவர்கள் ஆலயத்தில் பலியிடுதல், வருடாந்திரப் பண்டிகைகளையும் விழாக்களையும் ஆசரித்தல், விசேஷமாய் நியமிக்கப் பட்ட ஆசாரியர்களின் மூலமாகத் தேவனிடம் செல்லுதல் மற்றும் மோசேயின் மூலமாக இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட மற்ற பிரமாணங்கள் யாவற்றையும் காத்து நடத்தல் ஆகியவற்றினால் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்திருந்தனர். பிறகு, கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமில் கிறிஸ்தவமானது தொடக்கம் பெற்றது. கிறிஸ்துவின் சபையாராக அவரைப் பின்பற்றும் படியாகச் சில யூதர்கள் முடிவெடுத்த போது, அவர்கள் மோசேயின் பிரமாணத்தை விட்டு நீங்கி, புதிய பிரமாணங்களின் தொகுதியின் கீழ் வந்து, தேவனுடைய புதிய உடன்படிக்கையினுள் பிரவேசித்தார்கள். புதிய பிரமாணத்தின் கீழ், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அவர்கள் விசுவாசித்து நடப்பவர்களாய், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மூலமாக வெளிப் படுத்தப்பட்ட அவருடைய சித்தத்தின்படி வாழ்பவர்களாக, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற வகையில் தேவனை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்பவர்கள் ஆயினர்.

மோசேயின் பிரமாணத்தில் இருந்து கிறிஸ்தவத்திற்கு இந்த மாற்றத்தை யூதர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கையில், தேவன் இனியும் தம்முடைய மக்களின் மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவைத் தமக்கு ஆசாரியர்களாக ஊழியம் செய்வதற்குப் பெற்றிராமல், தம்முடைய மக்கள் யாவரையும் தம்முடைய ஆசாரியர்களாகக் கொண்டிருந்தார் என்ற ஒரு சத்தியமானது அவர்களுக்கு மிகவும் நம்பிக்கையான விடுதலையாக இருந்திருக்கலாம். புதிய உடன்படிக்கையின்படி, கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட எல்லாரையும் எடுத்து, அவர்களை "தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர் களுமாக்கினார்" (வெளி. 1:6). கிறிஸ்துவுக்குள் நாம், "தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதி யாயும், அவருக்குச் (தேவனுக்குச்) சொந்தமான ஜனமாயும்" (1 பேது. 2:9) இருக்கின்றோம். நாம், "ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்ட மாகவும் கட்டப்பட்டு" (1 பேது. 2:5) வருகிற கிறிஸ்துவின் சபையோடு

சேர்க்கப்பட்டிருக்கின்றோம். இந்த எல்லாக் கிறிஸ்தவர்களின் ஆசாரியத்து வமானது யூதர்களின் மனதில் ஆழமாய்ப் பதிந்தது போலவே நமது மனதிலும் ஆழமாய்ப் பதிய வேண்டும், பெரும் வியப்பினால் பயபக்தி யினால் மற்றும் நன்றியுணர்வின் ஒரு ஆழமான உணர்வினால் நம்மை ஏவ வேண்டும்.

சபையின் ஆசாரியத்துவ அமைப்பைப் புரிந்து கொள்ளும் பொழுது அது ஒவ்வொரு கிறிஸ்தவரையும் ஊக்குவிக்கும். முந்திய காலத்தில் தேவன் லேவியர்களைத் தம்முடைய ஆசாரியர்களாக ஏற்படுத்தியிருந்ததன் மூலம் அவர்களைக் கனப்படுத்தியிருந்தார்; மற்றும் இந்த நிகழ் காலத்தில், கிறிஸ்து வுக்குள் வருகின்ற ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் தேவன் அவருடைய இராஜ்யத்தில் ஆசாரியராக ஏற்படுத்துவதன் மூலம் அவர் ஒவ்வொரு நபரையும் கனப்படுத்தியிருக்கின்றார்.

தேவனுடைய எல்லா பிள்ளைகளினுடைய ஆசாரியத்தும் பற்றிய இந்த சத்தியமானது நம்மைப் பலமாகப் பற்றிக் கொண்டுள்ளதா? அதன் தனிச் சிறப்புக்களை நாம் கண்டிருக்கின்றோமா? அதற்கு நாம் அதிக ஆழமான சிந்தனையைக் கொடுப்போம்.

## தேவனிடமிருந்து வந்த ஆசாரியத்துவச் சிறப்புரிமை

கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் தங்கள் மீது பொழியப்பட்ட ஆசாரியத்துவச் சிறப்புரிமை பெற்றுள்ளவர்களாய் உள்ளனர். தேவன் தம்முடைய பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களிடத்தில் தாம் செய்திருந்தது போலவே, இவர்களைத் தம்முடன் ஒரு விசேஷித்த உறவினால் கனப் படுத்தியுள்ளார்.

மோசேயின் காலத்து, ஆசாரியர்கள் தேவனுடன் தனிச் சிறந்த ஒரு ஐக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் மற்ற இஸ்ரவேலர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படாத ஒரு வழிமுறையில் நாள்தோறும் தேவனு டைய பிரசன்னத்தில் வாழ்ந்தனர். முகாம் இடும் ஒவ்வொரு இடத்திலும், அவர்களின் கூடாரங்கள், உடன்படிக்கைக் கூடாரத்திற்கு நேர் முன்பாக, தேவனுடைய பிரசன்னத்திலிருந்து காணக் கூடியதாக அமைக்கப்பட்டன. இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டில் குடியமர்ந்த பொழுது, ஆசாரியர் களும் லேவியர்களும் தங்களுக்கு நில ஒதுக்கீட்டிற்குப் பதிலாக தேவனையே தங்களின் விசேஷித்த உடமையாகப் பெற்றார்கள். அவர்கள் நாற்பத்தியெட்டு ஊர்களையும் அதைச் சுற்றியிருந்த மேய்ச்சல் நிலங்களை யும் வசிக்கும் இடங்களாகப் பெற்றனர் (யோசு. 21:41), ஆனால் அவர்கள் தங்கள் நேரம் முழுவதையும் தேவனுக்கு ஊழியம் செய்ய ஒப்புக் கொடுக்கும்படியாக மற்ற கோத்திரத்தார்களால் ஆதரிக்கப்பட்டனர். இஸ்ரவேல் மக்களால் கொண்டு வரப்படும் பலி ஒவ்வொன்றும் உடன் படிக்கைக் கூடாரத்தில் ஒரு ஆசாரியராலேயே தேவனுக்குச் செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது. தேவன் ஆசாரியர்களைத் தம்மிடத்தில் ஒரு சலுகைமிக்க இணைவுறவு கொண்டிருக்கும்படியாகத் தனிப்பட அமைத்து

வைத்திருந்தார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஆசாரியர்களால் மட்டுமே மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்ட தேவனுடனான இந்த நெருக்கமான உறவானது இந்த கிறிஸ்தவ யுகத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தரப்பட்டுள்ளது. சுவிசேஷத்தின் மூலமாகத் தேவனிடத்தில் வருகின்ற எவரொருவரும் தேவனுடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டு, "அவருடைய சொந்த உடமையான" (தீத்து 2:14) நபராக நோக்கப்படுகின்றார். ஒரு காலத்தில் தேவனுடைய "ஜனங்களாயிராதவர்கள்" இப்பொழுது "தேவனுடைய ஜனங்களாய்" இருக்கின்றனர் (1 பேது. 2:10). தேவனிடத்திலிருந்து "தூரமாயிருந்தவர்கள்" (எபே. 2:17) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே "சமீபமாக்கப்"பட்டுள்ளனர் (எபே. 2:13). தேவன் (யோவா. 14:23), கிறிஸ்து (எபே. 3:17; கொலோ. 1:27) மற்றும் பரிசுத்த ஆவியானவர் (1 கொரி. 6:19, 20) ஆகியோர் நமக்குள் வாசம் பண்ணுகின்றனர். பிதா, இயேசு கிறிஸ்து (1 யோவா. 1:3) மற்றும் பரிசுத்த ஆவியானவர் (ரோமர் 8:5) ஆகியோருடைய ஐக்கியத்தில் நாம் தினந்தோறும் நடக்கின்றோம்.

இரண்டு கற்பலகைகளில் செதுக்கப்பட்ட பத்து கட்டளைகளின் முதல் பிரதியுடன் மோசே சீனாய் மலையில் இருந்து இறங்கி வந்த பொழுது, இஸ்ரவேலர்கள் ஒரு பொற்கன்றுக் குட்டிக்கு முன்பாக விழுந்து வணங்கி விக்கிரகாராதனை செய்து கொண்டிருந்ததையே கண்டார். அவர், "இந்தப் பத்துக் கட்டளைகளுடன் நான் சீனாய் மலையில் இருந்து இறங்கி வர முடியும் முன்பே மக்களாகிய நீங்கள் அவைகளை ஏற்கனவே முறித்துப் போட்டு விட்டீர்களே!" என்று கூறுவது போல், அக்கற்பலகைகளைத் தரையில் எறிந்தார். அவர் அந்தக் கன்றுக் குட்டியைத் தூளாக அரைத்து, அந்தத் தூளைத் தண்ணீர்ப் பரப்பின் மேல் தூவி, அதை மக்கள் குடிக்கும் படி செய்தார். கூடார வாசலில் மோசே நின்று கொண்டு, "கர்த்தருடைய பக்கம் இருப்பவர்கள் எல்லாரும் வந்து என் அருகே நில்லுங்கள்!" என்று கூறினார். உடனடியாக, லேவிகோத்திரத்தார் வீரமான பற்றுறுதி மற்றும் ஆதரவில் மோசேயின் அருகே சென்றனர். முகாம் முழுவதிலும் சென்று இந்த விக்கிரகாராதனையினால் குற்றப்பட்டவர்களைக் கொலை செய்யும்படி லேவிகோத்திரத்தாருக்கு மோசே கட்டளையிட்டார். அவர்கள் அவருடைய கட்டளையை உண்மைத் தன்மையுடன் நிறைவேற்றி, தங்களைத் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாய் இருக்க அனுமதித்துக் கொண்டனர். தேவனிடம் அவர்கள் கொண்டிருந்த உண்மைத் தன்மையின் காரணமாக, தேவன் அவர்கள் மீது தாம் தேர்ந்து கொண்ட ஆசாரியர்களாயிருத்தல் என்ற சிறப்புரிமையைப் பொழிந்து மோசேயின் யுகத்தில் எஞ்சியிருந்த காலம் முழுவதிலும் அவர்களைக் கனப்படுத்தினார். அம்ராமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவருடைய ஆசாரியர்களாக இருந்தனர், மற்றும் லேவியர்களில் எஞ்சியிருந்தவர்கள் கர்த்தருடைய ஊழியத்தில் அவர்களுக்கு உதவி செய்தனர். இவ்விதமாக, தேவன் எவரொருவருக்கும் அளிக்கக் கூடியவற்றில் மிக உயர்ந்த மரியாதையை உலகத்தில் அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட ஊழியர்களாய் இருத்தல் என்பதை லேவியர்கள் பெற்றனர்!

பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவன் லேவியர்களுக்கு மட்டும் அனுமதித்திருந்த கனத்தை இன்றைய நாட்களில் எவரொருவரும் கிறிஸ்துவின் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் அவரிடத்தில் வருகின்ற எவரும் அவருடைய பரிசுத்த ஆசாரியத்துவத்திற்கென்று அவரால் பிரித்து வைக்கப்பட்ட மக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்.

திகைக்க வைக்கும் இந்த சத்தியமானது நமக்கு ஒரு செய்தியைக் கொண்டுள்ளது. முதலாவது, தேவன் மீட்கப்பட்ட தம்முடைய மக்களுக்கு தம்முடைய பார்வையில் தனிச் சிறப்பையும் தகுதியையும் கொடுத்துள்ளார் என்பதை இது நமக்கு நினைவு படுத்த வேண்டும். நாம் ஒன்றுமற்ற தன்மையிலிருந்து தேவனுடைய விசேஷித்த உடமையாய் இருக்கும்படி உயர்த்தப்பட்டுள்ளோம். நாம் “மக்களாக” மட்டும் இருப்பதில்லை; நாம் “தேவனுடைய மக்களாய்” இருக்கின்றோம். அத்துடன், இந்த சத்தியமானது உலகில் நமது ஊழியத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட கருத்தில் நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம். மற்றும், இந்த சத்தியமானது நமக்குள் நன்றியுணர்வின் அழியாத ஒரு எண்ணப் போக்கினை உண்டாக்க வேண்டும். தேவனுடைய கிருபையினாலேயே நாம் எங்கிருக்கின்றோமோ அங்கும் என்னவாக இருக்கின்றோமோ அந்தப்படியேயும் இருக்கின்றோம்.

## தேவனிடத்திற்குச் செல்லும் ஆசாரியத்துவ சிலாக்கியம்

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் உறுப்பினர்களாய் இருப்பவர்களுக்கு தேவனிடத்திற்குச் செல்லும் ஆசாரியத்துவ சிலாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரை (தேவனை) அணுகுவதற்கு நாம் வேறெந்த மனிதர் மூலமாகவும் செல்ல வேண்டியதில்லை. கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனிடத்தில் சேரத் திறந்த அணுகுமுறை ஒன்றைப் பெற்றுள்ளோம்.

யூதர்கள் ஒரு மனித ஆசாரியர் மூலமாகவே தேவனிடத்தில் சென்று சேர முடிந்தது. தேவன் யூதர்களிடத்தில் ஒரு தீர்க்கதரிசி அல்லது ஆசாரியர் மூலமாகப் பேசினார், மற்றும் ஆசாரியர் மூலமாகவே யூதர்கள் தேவனுக்குப் பலி செலுத்தினார்கள். யூதர்கள் தங்களுக்கும் தேவனுக்கும் இடையில் இருந்த இடைவெளியை இணைப்பதற்கு மனித “இடை நடப்பவர்” ஒருவரைப் பெற்றிருக்க வேண்டியிருந்தது.

இப்பொழுது கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்கள் இயேசுவின் மூலமாகத் தேவனிடத்திற்கு நேரடியாகச் செல்ல முடியும். யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆன எல்லா மனிதருக்கும் மற்றும் தேவனுக்கும் இடையில் இருந்த தடைகள் யாவும் சிலுவையினால் நீக்கப்பட்டு விட்டன. யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகியோர் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள ஒருமைப்பாடு பற்றிய பகுதியொன்றின் முடிவில், பவுல் இந்த வழியைப் பற்றிக் குறிப்பிட்டார்: “அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்

கின்றோம்” (எபே. 2:18). பிற்பாடு, பவுல், “அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது” (எபே. 3:12). கிறிஸ்தவர் தேவனிடத்தில் சேருவதற்குத் தேவையாக உள்ள ஒரே மத்தியஸ்தர் இயேசுவே: “தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே” “எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே” (1 தீமோ. 2:5, 6அ).

எனது வாழ்வில் நான் இரண்டு தலைவர்களைப் பெற்றுள்ளேன். இவர்களில், அதிக நெருக்கமானவராக இருப்பவர் நான் தினமும் வேதாகமத்தைப் போதிக்கும் ஹார்டிங் பல்கலைக் கழகத்தின் தலைவர் ஆவார். அவர் என்னுடைய பணி முதல்வராய் இருக்கின்றார். சிற்றாலயத்தில் நான் அவரை நாள்தோறும் காண்கின்றேன், ஆசிரியர்களின் கூட்டத்திலும், அறைக் கூடத்தைக் கடந்து செல்லுகையிலும் நான் அடிக்கடி அவருடன் பேசுகின்றேன். சமூக விழாக்களுக்கு நான் அவருடன் செல்லுகின்றேன், மற்றும் நான் பிரசங்கிக்கும்படி வெளிச் செல்லாத நாட்களில் கல்லூரியில் கூடி வரும் சபையின் ஆராதனை ஊழியங்களில் நான் அவரைக் காண்கின்றேன். நான் அவரை எனது தனிப்பட்ட நண்பர் என்று அழைக்குமளவுக்கு அவருடன் அடிக்கடி பேசுகின்றேன் மற்றும் பல ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப் பழகியிருக்கின்றேன். ஒரு நாளின் எந்த வேளையிலும் நான் அவருடன் தொலைபேசியில் பேச முடியும் மற்றும் நான் விரும்பும் எதையும் அவருடன் பேச நான் அனுமதிக்கப்பட்டுள்ளேன். அவர் தொலைபேசியில் நான் அழைக்கையில் என்னுடன் பேச முடியாமற் போனால், அவரால் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக அவர் மீண்டும் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு பேசுவார்.

எனது வாழ்வின் இரண்டாவது தலைவராக அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி இருக்கின்றார். அவருடன் தனிப்பட்ட முறையில் நான் ஒருக்காலும் பேசியதில்லை. நான் ஒரே ஒரு முறைதான் அவரை நேரடியாகக் கண்டுள்ளேன், அதுவும் அவர் ஒரு அணி வகுப்பில் சற்றுத் தொலைவில் ஒரு காரில் பயணம் செய்கையில் கண்டுள்ளேன். நான் அவரைப் பற்றி செய்தித் தாள்களிலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கண்டவற்றின் மூலமாகவும் மட்டுமே அறிந்துள்ளேன். அவரை நான் ஒரு நண்பராக அறிந்துள்ளேன் என்று கூற முடியாது. அவருடைய சொந்த வாழ்வு பற்றி நான் நேரடியாக எதுவும் அறிந்ததில்லை, மற்றும் அவரும் கூட என்னைப் பற்றி ஒன்றும் அறிந்ததில்லை. ஒரு முக்கியமான விஷயம் பற்றி பேச நான் அவரை அழைக்க வேண்டியிருந்தால், அவருடன் பேசும்படி நான் அனுமதிக்கப்பட மாட்டேன். செய்தி அவருக்கு அனுப்பப்படும் என்ற வாக்குறுதி மட்டுமே எனக்குக் கிடைக்கும். அவர் என்னுடைய உலகில் இருந்து மிகவும் தொலைவில் உள்ள ஒரு உலகில் வாழ்கின்றார். ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்களிக்கும் இயந்திரத்தில் எங்கள் நாடு அதன் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வேளை தவிர அவரது வாழ்வு மற்றும் அதிகாரம் ஆகியவற்றில் தலையிடும் வழி எதுவும் எனக்கு

உண்மையில் கிடையாது. அவர் செய்கின்ற செயல்கள் என்னைச் சிறு அளவில் பாதிக்கும்படி இறங்குகின்றன, ஆனால் அவர் ஒருக்காலும் என்னைக் கண்டதில்லை, நான் அவரைத் தொலைவிலிருந்து மட்டுமே பார்த்திருக்கின்றேன்.

---

*விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் அவரிடத்திற்கு வருகின்ற*
*எவரொருவரும் தேவனால்*
*பிரித்தெடுக்கப்பட்ட மக்களுடன்,*
*அவருடைய பரிசுத்த ஆசாரியக் கூட்டத்துடன்*
*சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்.*

---

இந்த இரண்டு தலைவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? அது பின்கண்டபடி எளிதாகவே உள்ளது; ஒருவரிடம் சென்று சேரும் வழியை நான் பெற்றுள்ளேன், இன்னொருவரிடம் சென்று சேரும் வழியை நான் பெற்றிருக்கவில்லை. வித்தியாசமானது அந்த ஒரே ஒரு வார்த்தை யில்தான் உள்ளது: "சிலாக்கியம்." நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதால், தேவனுடனான எனது உறவானது ஹார்டிங் பல்கலைக்கழகத்தின் தலைவருடனான எனது உறவுடன் ஒப்பிடப்படும். கிறிஸ்துவின் மூலமாக நான் தேவனிடத்திற்குச் சுயாதீனமான மற்றும் தடைப்படாத பிரவேசத்தைப் பெற்றுள்ளேன். நான் அவரை எந்த வேளையிலும் ஜெபத்தில் அணுக முடியும். நான் அவருடைய தோழமையுடனும் பலத்துடனும் நாள்தோறும் நடக்கின்றேன். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனாக இருப்பதால், அவர் ஒருபோதும் என்னைக் காத்திருக்கச் செய்யவோ அல்லது நான் ஜெபிக்கும் பொழுது எனக்கு மீண்டும் அழைப்பனுப்பவோ தேவைப்படாதவராய் இருக்கின்றார். அவருடைய பிரசன்னத்தின் வாயிலானது கிறிஸ்துவினிமித்தம் எனது பிரவேசத்திற்காக எப்பொழுதுமே சற்றுத் திறந்திருக்கின்றது. அவர் தம்முடைய பிரசன்னத் திற்கு முன்பு என்னை வரும்படியாக அனுமதிப்பது மட்டுமின்றி, அதற்குள் என்னை அவர் வரவேற்கின்றார். அவர் எனது ஐக்கியத்தை நாடுகின்றார், நான் அவருடைய ஐக்கியத்தை நாடுகின்றேன். அவர் உண்மையாகவே எனது பரலோக பிதாவாக இருக்கின்றார்.

ஒரு கிறிஸ்தவன் என்ற வகையில் தேவனிடத்தில் சென்று சேர நான் பெற்றுள்ள சிலாக்கியத்தை மோசேயின் பிரமாணத்தின் கீழ் இருந்த யூதர்கள் பெற்றிருந்ததில்லை. அவர்கள் லேவிகோத்திரத்தின் ஆசாரியர்கள் மூலமாகவே தேவனிடத்திற்குச் சென்றார்கள். தேவன் அவர்களுக்கு நிலையான துணையாளராக இருந்தார், ஆனால் அவர்களின் சிலாக்கிய மானது மனித ஆசாரியத்துவத்தின் மூலமான அணுகுமுறையினால் எல்லைக் குட்படுத்தப்பட்டிருந்தது.

கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற ஆசாரியத்துவ சிலாக்கியம் பற்றிய சத்தியமானது நம்மை உற்சாகப்படுத்துவதாக மட்டுமின்றி, நமக்கு

சக்தியளிப்பதாகவும் இருக்க வேண்டும். ஒரு தகப்பன் தன்னிடத்தில் வரத் தன் பிள்ளைகளுக்கு அனுமதி அளிக்கின்றது போலவே தேவன் தம்முடைய பிரசன்னத்திற்குள் நம்மை வரவேற்கின்றார், நமது ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிக்கின்றார், மற்றும் அவரிடத்தில் அணுகும் சுயாதீனத்தை நமக்குத் தருகின்றார். தேவனுடனான ஐக்கியத்திற்கான இந்த வாய்ப்பை நாம் ஜெபம், தோழமை மற்றும் ஆவிக்குரிய ஊழியம் ஆகியவற்றின் மூலம் பயன்படுத்திக் கொள்வோமாக.

## தேவனுக்காக ஒரு ஆசாரியத்துவப் பணி

கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் ஆசாரியத்துவப் பணி ஒன்றைப் பெற்றுள்ளோம். நாம் ஆசாரியர்களின் ஊழியத்தைச் செய்கின்றோம்.

பழைய ஏற்பாட்டின் காலங்களில், இஸ்ரவேலர் எல்லாருக்காகவும் ஆசாரியர்கள் தேவனுக்குப் பலிகளை செலுத்தினார்கள். தேவனுக்கு ஆராதனை நடத்தப்படும்பொழுது கூடாரத்தின் பரிசுத்த இடத்தில் ஆசாரியர்கள் மட்டுமே உட்புக முடிந்தது. இஸ்ரவேலரின் பொது மக்கள் கூடார வாசலில் நின்று கொண்டு, கூடாரத்தினுள் ஆசாரியர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டனர். பாவ நிவாரணத்திற்கான மாபெரும் நாளன்று, பாவ நிவாரண பலியின் இரத்தத்துடன் பிரதான ஆசாரியர் மகா பரிசுத்த இடத்திற்குள், தேவ சமூகத்திலே பிரவேசிப்பார், அந்த இரத்தத்தின் மூலமாக தேசத்தின் பாவங்கள் யாவும் அடுத்த பாவ நிவாரண நாள் வரையிலும் சுத்திகரிக்கப்படும். இந்த ஆராதனைப் பொறுப்புகளுக்கு அப்பால், தேவனுடைய இனமானது தங்களுக்கான தேவனுடைய சித்தத்தின்மீது நம்பிக்கை கொண்டிருக்கும்படி, இஸ்ரவேல் யாவருக்கும் தேவனுடைய பிரமாணத்தைப் போதித்தல் என்ற குறிப்பிட்ட கட்டளையையும் ஆசாரியர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றிருந்தனர்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தின் போது இருந்த ஆசாரியர்களின் இந்தப் பரிசுத்த பணிகள், கிறிஸ்துவின் யுகத்தில் கிறிஸ்தவர்கள் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுவனவற்றுடன் அவைகளின் இணைகளைக் காண்கின்றன. கிறிஸ்தவ யுகத்தில் விலங்குப் பலியெதுவும் செலுத்தப் படுவதில்லை, ஆனால், பாடுதல், ஜெபித்தல், கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடித்தல், கொடுத்தல், தேவனுடைய வசனத்தைப் படித்தல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தை நிறைவேற்றுதல் என்ற ஆவிக்குரிய பலிகள் ஒவ்வொரு கிறிஸ்தவராலும் செலுத்தப்படுகின்றன. பாடுதலைப் பற்றி எபிரெயருக்கு எழுதியவர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி. 13:15) என்று கூறினார். வெளிப்படுத்தின விசேஷத்தில், பூமியிலுள்ள பரிசுத்தவான்களின் ஜெபங்கள், பொற்பீடத்தின் முன் வைக்கப்பட்ட தூபமாக மறைமுக மொழிநடையில் விவரிக்கப்படுகின்றன (வெளி. 8:3). "இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்கு" (1 பேது. 2:5) என்பது இந்த பூமியில் சபையின் மிக முக்கியமான

நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. எபிரெயருக்கு எழுதியவர், தேவ சமூகத்தின் கதவானது கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகக் கிறிஸ்தவர் களுக்கு எப்போதும் திறந்துள்ளதாகச் சித்தரிக்கின்றார்:

> ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப் பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப் பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத் தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம் (எபி. 10:19-22).

கிறிஸ்து இயேசு நமது மகா பெரிய, நித்திய பிரதான ஆசாரியராகி யுள்ளார், ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவர் மூலமாக எந்த இடத்திலும், எந்த வேளையிலும் தேவனிடத்திற்கு வரக் கூடிய ஆசாரியராக இருக்கின்றார். நமது மீட்பர், “தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்” (எபி. 9:12). பழைய ஏற்பாட்டுக் காலத்தின் பிரதான ஆசாரியர்கள் தேசத்தின் பாவ நிவாரணத்திற்காக ஆண்டிற்கு ஒருமுறை விலங்குப் பலி ஒன்றினைச் செலுத்தி அதன் இரத்தத்தை மகா பரிசுத்த இடத்திற்குள் கொண்டு செல்வார்கள், ஆனால் கிறிஸ்து தம்மையே கையளித்த நிலையில் பரலோகத்திற்குச் சென்றார் (எபி. 9:24, 25). இப்பொழுது, கிறிஸ்து கையளித்த அந்த சுய பலியின் மூலமாக, அவர் என்றென்றைக்கும் நமது பிரதான ஆசாரியராக நிலைத்திருப்பார், இவ்விதமாக தேவனுக்கு முன்பாகத் தனிப்பட்ட ஒரு ஆசாரியத்துவத்தை நமக்கு அவர் வழங்கு கின்றார். இதனால், அவரது இரட்சிக்கும் கிருபையை எல்லா மனிதர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம், தேவனுடைய வசனத்தை உலகம் முழுவதிலும் போதிக்கும்படிக் கிறிஸ்தவர்கள் கட்டளையிடப் பட்டுள்ளனர் (மாற். 16:15, 16).

ஒரு பொருளினுடைய பணியே அதன் அடையாளத்தைப் பொதுவாக அறியப்படுத்துகின்றது. நீண்ட கைப்பிடியும் அதன் முனையில் ஒரு கூர்மையான வளைந்த தகடும் கொண்ட கருவியானது மண்வெட்டப் பயன்படுவதினால் அதை மண் வெட்டி என்கின்றோம். ஒரு சிறு கருவியானது ஒரு சிறு கைப் பிடியையும், தட்டையான பக்கம் கொண்ட ஒரு உலோகத் தலையையும் கொண்டுள்ளதாக, ஆணிகளை அடிக்கப் பயன் படுவதால் அதை சுத்தியல் என்கின்றோம். கிறிஸ்தவர்கள் தேவனுக்கு முன்பாக ஆசாரியர்கள் என்ற வகையில் பணியாற்ற வேண்டுமாகையால், புதிய ஏற்பாடு நம்மை ஆசாரியர்கள் என்று அழைப்பது பற்றி நாம் திகைப்படைவதில்லை. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் ஆசாரியர்கள் என்ற வகையில் மூன்று முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்

(வெளி. 1:6; 5:10; 20:6); மற்றும் அவர்களின் ஆசாரியத்துவமானது அவர்களின் பணியினால் மற்ற பல முறைகள் மறைமுகமாய் உணர்த்தப் படுகின்றது (1 பேது. 2:5, 9; எபி. 13:15).

நாம் உலகத்தில் தேவனுடைய ஆசாரியர்களாகப் பணியாற்றிக் கர்த்தரால் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற சத்தியமானது நமது பணி மற்றும் ஊழியம் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய தெளிவானதொரு கண்ணோக்கினைத் தர வேண்டும். பழைய ஏற்பாட்டு ஆசாரியர் எவரும் தமது எல்லா செயல்பாடுகளைச் சுற்றிலும் முக்கியத்துவத்தின் உணர்வறிவு ஒன்றைக் கொண்டிருப்பார், ஏனெனில் அவர் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரராக, தேவனுடைய இனத்தை அவருக்கு முன்பாக ஆராதனை யிலும் ஊழியத்திலும் வழி நடத்துபவராக இருந்தார். அது போலவே, இன்றைய நாட்களில் தேவனுடைய பரிசுத்த ஆசாரியத்துவம் என்ற வகையில் நாம், தேவன் தம்முடைய பூமியில் நமக்களித்துள்ள இந்த ஒப்புவமையற்ற பணிக்காக அவருக்கு நன்றியறிதலுடன் ஆராதித்து, ஊழியம் செய்து மற்றும் போதிக்கின்றோம்.

நாம் தேவனுடைய ஆசாரியர்களாகப் பணிபுரிவதால், பொறுப்பின் மாபெரும் அறிவுணர்வொன்றை நாம் உணர வேண்டும். லாரி கம்பெனி யொன்றின் தலைவர், கம்பெனியிலிருந்து வெளிச் செல்லும் வாயிலுக்கு மேலாக, பல இடங்களுக்குத் தங்கள் பாரங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் செல்லும் ஓட்டுநர்கள் வாசிக்கும்படியாக ஒரு விளம்பரத்தை வைத்தார். அதில், "இந்த வாயிலுக்கு அப்பால், நீங்கள் கம்பெனியைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றீர்கள்" என்று எழுதியிருந்தது. மக்கள் அந்த லாரி ஓட்டுநர்களைக் கண்ட போது, அவர்கள் கம்பெனியைக் கண்டார்கள். நாம் தேவனுடைய ஆசாரியர்களாய் இருப்பதால், உலகத்தில் நாம் தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம். சக ஆசாரியரே, நமது பொறுப்பை நாம் வினயமாக மேற்கொள்ளுகின்றோமா?

## முடிவுரை

ஆகையால், கிறிஸ்துவின் யுகத்தில், கிறிஸ்தவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக இருக்கின்றார்கள். நாம் தேவனிடத்திற்கு ஆசாரியத்துவ வழியொன்றைப் பெற்றுள்ளோம், ஆசாரியத்துவத் தனிச் சிறந்த சிலாக்கியம் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது, உலகத்தில் நாம் ஒரு ஆசாரியத்துவப் பணியை நிறைவேற்றுகின்றோம். நாம் மிக உயர்ந்த கனம் பெற்றுள்ளோம், ஏனெனில் நாம் யேகோவாவின் சொந்த மக்களாக இருக்கும்படிப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளோம். நாம் மிக உயர்ந்த அழைப்பைப் பெற்றுள்ளோம், ஏனெனில் நாம் தேவனைப் போலப் பரிசுத்தமாய் இருப்பதற்கென்று அழைக்கப்பட்டுள்ளோம். நாம் மிக உயர்ந்த பணியைக் கொண்டிருக்கின்றோம், ஏனெனில் தேவனுடைய ஆசாரியர்களின் பணி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிறிஸ்து உங்கள் பாவங்களைச் சுத்திகரிப் பதற்கும் உங்களைத் தேவனுடைய ஆசாரியர்களில் ஒருவராக ஆக்குவதற்

கும் நீங்கள் அவரை அனுமதித்திருக்கின்றீர்களா? கிறிஸ்தவர் ஒருவர் பெற்றக் கொள்கின்றவைகளின் நிமித்தமாக மட்டுமல்ல, ஆனால் ஒரு கிறிஸ்தவர் எப்படியிருக்கின்றார் மற்றும் என்ன செய்கின்றார் என்பவைகளினிமித்தமாகவும் நாம் கிறிஸ்தவர்களாய் இருக்க விரும்ப வேண்டும்.

நமது பாடல்கள், நமது ஆர்வங்களையும், பற்றுறுதிகளையும், மதிப்புகளையும் எதிரொலிக்கின்றன. இது பரலோகத்திலும் உண்மையாக இருக்கின்றது. பரலோகத்தில் பாடப்படுகின்ற பாடல்கள் யாவை? அரியணையில் வீற்றிருந்தவருடைய கரத்திலிருந்து, ஆட்டுக்குட்டியானவர் ஏழு முத்திரைகளையுடைய ஒரு புத்தகச் சுருளை வாங்கிய போது பரலோக அரண்மனையில் பாடப்பட்ட பாடலைக் கவனியுங்கள்:

> தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங் களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக் களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் (வெளி. 5:9, 10).

உங்கள் நாட்டின் தலைவர் தம்முடைய அமைச்சரவையின் அங்கமா யிருந்து நாட்டிற்காகப் பணி புரியும்படி உங்களை அழைத்தால், நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? பெரும்பாலும் ஏற்றுக் கொள்வீர்கள். உங்கள் நகரின் மேயரால் நகரத்திற்கு விசேஷித்த ஒரு ஊழியனாக சேவை செய்யும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டால், நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நிச்சயமாக நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். அண்டத்தைப் படைத்தவரும், தம்முடைய குமாரன் மூலமாக உங்களுக்கு மீட்பை அளித்திருப்பவரு மாகிய தேவன், உங்களைத் தம்மிடத்திற்கு வரும்படியாகவும், அவருடைய பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக இந்த உலகத்தில் அவருக்கு ஊழியம் செய்யும் படியும் உங்களிடத்தில் கேட்கின்றார். நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. உங்கள் நாட்டில் குழந்தைகளுக்கான சட்டங்களை வயது வந்தவர்களுக்கான சட்டங்களுடன் ஒப்பிடவும்.
2. முதல் நூற்றாண்டின் யூதர்கள், தாங்கள் மோசேயின் பிரமாணத்தின் கீழா அல்லது கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தின் கீழா எந்தப் பிரமாணத்தின் கீழ் இருந்தனர் என்பது பற்றி எவ்விதம் குழப்பம் அடைந்திருக்கலாம் என்பதை விவரிக்கவும்.

3. கிறிஸ்தவராகியிருந்தவரான யூதருடைய மனதில் உண்மையில் மாறுபட்டதாய் நின்றதென்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
4. தேவனுக்கும் பழைய ஏற்பாட்டு ஆசாரியருக்கும் இடையில் எவ்வகைப்பட்ட விசேஷித்த உறவு இருந்தது?
5. தேவனுடைய ஆசாரியர்களாயிருப்பதென்பது இன்றைய நாட்களில் நமக்கு எவ்விதத்தில் மதிப்பையும் தனிச் சிறப்பையும் தருகின்றது?
6. "தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம்" என்ற சொற்றொடர் அர்த்தப்படுத்துவது என்ன?
7. தேவனிடத்தில் சென்று சேருவதன் விளைவாக நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் திட்டவட்டமான ஆசீர்வாதங்கள் யாவை?
8. இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய ஆசாரியர்களாக எவ்விதம் பணியாற்றுகின்றோம்?
9. கிறிஸ்தவர்களைத் தேவனுடைய ஆசாரியர்கள் என்று குறிப்பிடும் வேத வசனங்களை அட்டவணைப் படுத்துக.
10. வெளி. 5:9, 10 வசனப் பகுதியானது விசுவாசிகளின் ஆசாரியத்துவத்தை எவ்விதம் பிரதிபலிக்கின்றது?
11. இன்றைய நாட்களில் ஒருவர் எவ்விதத்தில்தேவனுடைய ஆசாரியராகின்றார்?
12. இன்றைய நாட்களில் எவரொருவரும் தேவனுடைய ஆசாரியராக முடியுமா?